உ

# வழிபாட்டுத் தெய்வங்களில்
# ஐயப்பன்



"கலாபூஷணம்"
எஸ். சிவானந்தராஜா
2018

உ

# வழிபாட்டுத் தெய்வங்களில் ஐயப்பன்

(1) தமிழர் வழிபாட்டுத் தெய்வங்கள்

(2) ஹரிஹர புத்திரன்

(3) இலங்கையில் உள்ள ஐயனார் ஆலயங்கள்

(4) ஐயனார் காதை

(5) சுழிபுரம் மேற்கு ஹரிஹர புத்திர ஐயனார்

"கலாபூஷணம்"
எஸ். சிவானந்தராஜா

**2018**

தலைப்பு: வழிபாட்டுத் தெய்வங்களில் ஐயப்பன்

ஆசிரியர்: எஸ். சிவானந்தராஜா

முகவரி: இந்துக்கல்லூரி வீதி, செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு

பதிப்புரிமை: ஆசிரியருக்கே

பிரதிகள்: 300

முதற்பதிப்பு: மார்கழி 2018

விலை: ரூபா 100/=

ISBN: 978-955-38461-4-3

# முகவுரை

இலங்கையில் பல நூற்றாண்டுகளாக ஐயப்பன் வழிபாடு இருந்து வருகின்றது. இந்தியாவில் சபரிமலை ஐயப்பன் வழிபாடு பிரசித்தமானது. இலங்கையிலும் ஐயப்பன் வழிபாட்டைப் பலர் ஆர்வத்துடன் செய்து வருகின்றனர். குறிப்பிட்ட இலங்கையிலுள்ள ஐயப்பன் திருக்கோவில்கள் பற்றிய குறிப்புகள், நூல்கள் பாராட்டத்தக்கவகையில் அமைந்துள்ளன.

பல ஐயப்பன் திருக்கோவில்களில் வருடமொருமுறை விசேட பொங்கல், வழிபாடுகள் இருந்து வருகின்றன. இன்னும் சில திருக்கோயில்களில் வருடாந்த மகோற்சவங்கள் நடைபெறுகின்றன. இந்த விசேட நாட்களில், குறிப்பிட்ட திருக்கோவில்களில் "திருவூஞ்சல்" பாடல்களும் பாடப்படுகின்றன.

இந்த வகையில் சுழிபுரம் மேற்கு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் கோவில் பற்றிய தகவல்களைத்தர முயற்சித்துள்ளேன். இலங்கையிலுள்ள அனைத்து ஐயப்பன் கோவில்களின் புராணங்கள், திருவூஞ்சல்கள், பெருமைகள் மற்றும் படங்கள் தரப்படின், இந்நூலின் மறுபதிப்பு சிறப்பான முறையில் வெளிவரும்.

எனவே ஐயப்ப பக்தர்களின் ஆதரவை இத்தால் தருமாறு தயவுடன் வேண்டுகின்றேன்.

இந்த ஆக்கத்துக்கான சில நல்ல கருத்துக்களைத் தந்துதவிய பண்டிதர் திரு. தி. பொன்னம்பலவாணருக்கு எனது நன்றிகள்.

இந்துக்கல்லூரி வீதி,
செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு.

நூலாசிரியர்
**எஸ். சிவானந்தராஜா**
10.12.2018

# 1. தமிழர் வழிபாட்டுத் தெய்வங்கள்

சிவனே முழுமுதற் கடவுள். ஐம்பூத வடிவினன். எனவே, தமிழ் மக்களின் பண்டைய சமயம்சார்ந்த வாழ்க்கையானது, இயற்கை நில இயல்புகளுக்கேற்ற வகையிலும் அமைந்திருந்தது. முருக - கொற்றவை வழிபாடுகள், நாகவழிபாடு என்பன முக்கிய இடம்பெற்றிருந்தன. வழிபாடுகளில் வெறியாட்டு இடம்பெறும்போது, வழிபடுவோர் ஒருவரின் ஆட்டத்திலே இறைவன் வெளிப்படுவான். இங்கு பூசாரிகள் இல்லை. மரணமடைந்தவருக்கு கல்நட்டு வழிபாடு கூட இடம்பெற்றது.

மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல் ஆகிய நில மக்கள், வழிபட்ட முறைகள் "தொல்காப்பியம்" நூலில் பின்வருமாறு குறிப்பிட்டு காட்டுகின்றது.

**மாயோன் மேய காடுறை யுலகமுஞ்**
**சேயோன் மேய மைவரை யுலகமும்**
**வேந்தன் மேய தீம்புன லுலகமும்**
**வருணன் மேய பெருமண லுலகமும்**
**முல்லை குறிஞ்சி மருத நெய்தலென**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே**

**(பொருள் 5)**

குறிஞ்சி நில மக்கள் முருகனையே வணங்கினர். இங்கு மாயோன், சேயோன், இந்திரன், வருணன் தெய்வங்களே போற்றப் பட்டுள்ளனர். மருத நிலத்து தெய்வமாக இந்திரனும், நெய்தல் நிலத்து தெய்வமாக வருணனும் வணங்கப்பட்டனர்.

கொற்றவை என்பவள் ஓர் வெற்றித் தெய்வம். முருகனின் தாயே கொற்றவை என்பர். சிவனின் அம்சமான பிள்ளையார், முத்துமாரி, முருகன், பைரவர், அனுமான், ஐயப்பன் வழிபாடுகள் பின்னரே வந்தன. திருமாலின் அவதாரமாக இராமர், கண்ணன் இருப்பது போல, ஐயனாரின் அவதாரமாக ஐயப்பன் உள்ளார்.

சங்ககால மக்கள் தாம் விரும்பிய கடவுளரை வழிபட்டனர். வைதிக வழிபாட்டு முறைகளும் சிறிது சிறிதாக உட்புகுந்தன. முனிவர்கள் வாழ்ந்த காலத்தில் அக்கினி வளர்த்து யாகஞ் செய்தல் முறைகள் இருந்துள்ளன. ஆரியரிகளின் சமயக் கொள்கைகளில் முத்தீ வளர்த்தல், வேதம் ஓதுதல், முப்புரிநூல் பூணுதல், மந்திரம் உச்சாடனம் செய்தல் இடம்பெற்றன. எமது நாயன்மார்கள் காலத்தி லும் சிவனே முழுமுதற் கடவுளாகப் போற்றி வணங்கப்பட்டார்.

இந்தவகையில் ஆரியமும் - தமிழும் சிவனின் வடிவமாகப் போற்றப்பட்டன.

எமது நாயன்மார்கள் காலத்தில் அறுவகைச் சமயங்கள் இருந்தன என்பதை நாம் அறிகின்றோம்.

"....... தொண்டர்க்கு அங்கங்கே அறுசமயமாகி"
நின்ற......." (நாவுக்கரசர் - "தக்கனது....")

| | | | |
|---|---|---|---|
| சைவம் | - சிவன் | காணபத்தியம் | - கணபதி |
| சாக்தம் | - பராசக்தி | கௌமாரம் | - முருகன் |
| வைணவம் | - விஷ்ணு | சௌரம் | - சூரியன் |

இலங்கையிலுள்ள பல ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயங்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்டுள்ளன. இவ்வாலயங் களுக்கென பலர் பிரபந்தங்களை இயற்றியுள்ளனர். இவற்றில் திருவூஞ்சல்கள், புராணங்கள் என்பனவும் அடங்கும். இவ்வாலயங் களுக்கென வரலாறுகள் உள்ளன.

கந்தபுராணத்தில் (சாத்தாப்படலம்) ஹரிஹரசுதன் பற்றிய வரலாறு காணப்படுகின்றது.

கேரளத்திலே பந்தள நாட்டு மன்னருக்கு கிடைத்த குழந்தையே, சாஸ்தாவின் அவதாரமான ஐயப்பன், மணிகண்டனாக வளர்ந்தார்.

# உ. ஹரிஹர புத்திரன்

இதே நாயன்மார்களது காலத்திலும், கந்தபுராணத்திலும் ஹரிஹர புத்திரன் பற்றிய குறிப்புகளும், வரலாறுகளும் காணப்படு கின்றன.

1) "பார்த்தனுக் கருளும் வைத்தார்
பாம்பரை யாட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார்....."
(நாவுக்கரசர் - "பார்த்தனுக்கு")

2) "......... மாயவனும் மலரவனும் வானோரேத்த
நஞ்சுண்டுகந்த மைந்தன் றன்னை....."
(நாவுக்கரசர் - "தாயவனை")

3) ".....மாகாளன் வாசல் காப்பாக....." (நாவுக்கரசர் / "அந்தகனை")

4) "ஐயன் காண், குமரன் காண், ஆதியான் காண்"
(நாவுக்கரசர் - "ஐயன்காண்")

5) மைக்க ருங்கடல் மேனியும் வானுலாஞ்
செக்கர் வேணியுஞ் செண்டுறு கையுமாய்
உக்கி ரத்துடன் ஓர்மகன் சேர்தலும்
முக்கண் எந்தை முயக்கினை நீங்கினான்
(கந்தபுராணம் - சாத்தாப் படலம் 49)

5) அத்த குந்திரு மைந்தர் கரிகர
புத்தி ரன்எனும் நாமம் புனைந்து
(கந்தபுராணம் - சாத்தாப் படலம் - 50)

காருறழ் வெய்ய களிற்றிடை யாகிப்
பாரிடர் எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரணம் ஊர்பவன் முன்னுற வந்தான்.
(கந்தபுராணம் - சாத்தாப் படலம் - 58)

அங்கண் மேவி அரிகர புத்திரன்
சங்கை யில்பெருஞ் சாரதர் தம்மொடும்
எங்கு மாகி இருந்தெவ் வுலகையுங்
கங்கு லும்பகல் எல்லையுங் காப்பனால்.

(கந்தபுராணம் - சாத்தாப் படலம் - 54)

"மேதகு செண்டுள வீரன் இசைப்பான்....."

(கந்தபுராணம் - சாத்தாப் படலம் - 65)

ஐயனாரின் உருவம் பற்றி கந்தபுராணம் (சாத்தாப்படலம் - 49) குறிப்பிடுகையில் "கருங்கடல் போன்ற இருண்ட மேனியும், செவ்வானம் போன்ற சடையும், செண்டாயுதம் தாங்கிய திருக்கரமும் யாவரும் போற்றுதற்குரிய வீரமும், ஞானிகளால் போற்றப்படுபவராயும் உள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

சிவபெருமான் "ஹரிஹரபுத்திரன்" எனத் திருநாமம் வைத்ததை கந்தபுராணம் (சாத்தாப் படலம் 50) கூறுகின்றது.

ஐயனாரை உருத்திரர்களுள் ஒருவராக்கி, புவனத்தின் ஒரு பகுதியை அளித்து, தேவர் முதல் முனிவர்களும் வணங்கும் பேற்றினை வழங்கி, புவனத்தலைவராக்கி, உலகனைத்தையும் காக்கும் பெருவரத்தையும் சிவன் ஐயனாருக்கு நல்கினார்.

புவனம் ஈந்து புவனத் திறையென
அவனை நல்கி அமரரும் மாதவர்
எவரும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினான்
சிவன தின்னருள் செப்புதற் பாலதோ.

(கந்தபுராணம் - சாத்தாப் படலம் 51)

மண்ணகத்தவரும், வானகத்தவரும், விஷ்ணுவும் போற்றும் அவனுக்கு இணையாக யாவரும் இல்லை. பாஞ்சசன்னியத்தைக் கையில் வைத்துள்ள விஷ்ணுவும், கைலயங்கிரி நாதனும் தந்த மைந்தனானவன் பூரணை - புட்கலை இருமருங்கிலும் சமேதராய் யானையில் ஏறி காட்சி கொடுப்பவன்.

முன்னொருமுறை இந்திரனும் - இந்திராணி தேவர்களும் அசுரர்களுக்குப் பயந்து, பொன்னகரமாகிய இந்திரலோகத்தைவிட்டு பூலோகம் வந்து மூங்கில் நிறைந்த காட்டினிலே மறைந்து வாழ்ந்தனர்.

தேவர்களின் குறைகளை சிவபிரானுக்குச் சொல்ல தேவர் களுடன் கைலயங்கிரிக்குச் செல்லவேண்டியிருந்தது. ஆதலால் இந்திராணியை தனிமையில் விட்டுச் செல்ல அஞ்சினர். இந்நிலையில் காத்தற் தெய்வமாகிய ஐயனாரிடம், இந்திரன் வேண்டுகோளைச் சொல்லி, இந்திராணியை காத்தருளுமாறு வேண்டினான்.

இதைக் கேட்ட ஐயனார் இந்திராணியைக் காக்க தனது சிறந்த சேனாதிபதியான வீரமாகாளரை அனுப்புவதாகச் சொல்லி வழியனுப் பினார்.

கைலயங்கிரிக்குச் சென்ற கணவன், சென்ற விடயம் சித்திபெற வேண்டி இந்திராணி சீர்காழியில் தவஞ்செய்து வந்தாள். இந்நிலையில் அசமுகியாகிய அரக்கியும், அவள் தோழியான துன்முகியும் இந்திராணி தனித்திருந்து தவஞ்செய்வதைக் கண்டனர். அழகுசுந்தரியாகிய இந்திராணியை, வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று, சூரனின் மனையாளாக்க எண்ணினாள். அசமுகியும், துன்முகியும் வருவதைக் கண்ட வீரமாகாளர், இக்கொடியாள் "ஏன் வருகின்றாள், நான் நிற்பதைக் காணாது இக்கொடியவள் ஏன் சுற்றித் திரிகிறாள்" என்று எண்ணியவாறு உற்று நோக்கினார்.

அசமுகியானவள், பொன்னகரம்விட்டு, இங்கு தவஞ்செய்யும் இந்திராணியை, சூரனின் மனையாளாக்கிட எண்ணி வரும்படி வலியுறுத்தி நின்றாள்.

இந்நிலையில் இந்திராணியானவள், ஐயனாரை எண்ணி "ஓலம், ஓலம்" என்று

**பையரா அமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்**
**ஐயனே ஓலம் விண்ணோர்க் காதியே யோலம் செண்டார்**
**கையனே ஓலம் எங்கள் கடவுளே யோலம், மெய்யா**
**மெய்யனே யோலம் தொல்சீர் வீரனே யோலம் ஓலம்**

(கந்தபுராணம் - மாகாளர் வருகை - 1)

அங்கு அருகில் நின்ற வீரமாகானர், அசமுகி, துன்முகி இருவரினதும் ஒரு கைகளை வெட்டினார். வேதனை தாங்காது அசமுகியானவள் சூரனின் அரசவைக்குச் சென்று முறையிட்டாள்.

இச்சம்பவத்தை நாரதர் மூலம் அறிந்த இந்திரன், பூலோகம் வந்து ஐயப்பனுக்கு நன்றிகூறி இந்திராணியை அழைத்துச் சென்றார்.

ஐயனாரது திருவவதாரம் பற்றி பத்ம புராணத்திலும் கூறப் பட்டுள்ளது.

"பஸ்மாசுரன்" என்ற அசுரன் சிவனை நினைத்து தவமியற்றி வரமும் பெற்றான்.

"யார் தலையில் நான் கைவைக்கின்றேனோ, அவர் உடனே நீறாக வேண்டும்" என்பதே அவன்பெற்ற வரமாகும்.

பஸ்மாசுரனின் கொடுமைகளை அறிந்த திருமால், அழகிய மோஹினி வடிவந்தாங்கி, அவனை அணுகினார். தனது வரத்தை பரீட்சிக்கப்போவதாக திருமாலிடம் பஸ்மாசுரன் கூறினான்.

"என்னை அடைய வேண்டுமானால், "சிரசில் எண்ணெய் ஸ்நானம் செய்து வா" எனத் திருமால் கூறினார். குளிப்பதற்காக எண்ணெயை தலையில் பஸ்மாசுரன் வைத்தபோது, அவன் பஸ்மமாகினான்.

இந்நிலையில் மோஹினி வடிவங்கொண்ட திருமாலை "பிச்சாடனர்" வடிவெடுத்த சிவனும் சேர்ந்து ஹரிஹர புத்திரர் அவதாரம் எடுத்தார் என்பது வரலாறு.

ஐயனார் பிரமச்சாரியாகவும், ஐயனாரின் அவதாரமான ஐயப்பன் இரு தேவியருடனும் காட்சி அளிப்பார்.

## 3. இலங்கையில் உள்ள ஐயனார் ஆலயங்கள்

1) அக்கரைப்பற்று - பனங்காடு பாசுபதேஸ்வரர் ஐயனார் கோவில்
2) அனலைதீவு - ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலயம்
3) அராலி கிழக்கு - மலையாளங்காடு ஐயனார் ஆலயம்
4) ஆரையம்பதி - ஸ்ரீ பரமநயினார் ஆலயம்
5) இராமநாதபுரம் - புதுக்காடு ஐயனார் ஆலயம்
6) உப்புக்குளத்தடி - ஐயப்பன் ஆலயம்
7) உடப்பு குளத்தடி - ஐயனார் ஆலயம்
8) கல்முனை - ஐயப்பன் ஆலயம்
9) காத்தான்குடி - ஸ்ரீ பரமநயினார் ஆலயம்
10) காரைநகர் - ஆண்டிக்கேணி ஐயனார் ஆலயம்
11) காரைநகர் - வியாவில் ஐயனார் ஆலயம்
12) கிளிநொச்சி - ஜயந்திநகர் ஐயனார் ஆலயம்
13) கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி ஐயனார் ஆலயம்
14) கொழும்பு 15-ஹரிஹர ஐயப்பன் திருக்கோவில், அளுத்மாவத்தை
15) கோண்டாவில் - கிழக்கு சபரிமலை ஐயப்பன் கோவில்
16) சண்டிலிப்பாய் - கோவிற்குளம் ஐயனார் ஆலயம்
17) சரவணை கிழக்கு - மலியற்புலம் ஐயனார் ஆலயம்
18) சுழிபுரம் மேற்கு பாண்டுவெட்டை சித்தில் ஐயனார் ஆலயம்
19) சுழிபுரம் மேற்கு - ஹரிஹரபுத்திர ஐயனார் கோவில்
20) சுருவில் - ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலயம்
21) சுன்னாகம் - ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலயம்
22) செங்கலடி - ஐயனார் ஆலயம்
23) தெல்லிப்பளை - கரண்டக்குளம் ஐயனார் ஆலயம்
24) நயினாதீவு மலையிட்டிபுலம் - ஐயனார் ஆலயம்
25) நெடுந்தீவு மேற்கு - உயரப்புலம் ஐயனார் ஆலயம்
26) பாண்டிருப்பு ஐயனார் ஆலயம்
27) புங்குடுதீவு - செட்டிப்புலம் காளவாய்த்துறை ஐயனார் ஆலயம்
28) புங்குடுதீவு - வல்லவன்பதி ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலயம்
29) மண்டைதீவு - ஐயனார் ஆலயம்
30) மண்டூர் - ஐயனார் ஆலயம்
31) மாதகல் - ஐயனார் ஆலயம்
32) மூளாய் - ஐயனார் ஆலயம்
33) யாழ். வண்ணை வடமேற்கு ஐயனார் ஆலயம்
34) வட்டு மேற்கு - வட்டியவத்தை ஐயனார் ஆலயம்
35) வடலியடைப்பு - ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயம்
36) வேலணை துறையூர் - இலந்தைவனம் ஐயனார் ஆலயம்
37) வடமராட்சி நவிண்டில் ஸ்ரீ ஐயப்பன் திருக்கோவில்
38) சுழிபுரம் வடக்கு - கள்ளியம்பிட்டி ஐயனார் ஆலயம்

## 4. ஐயனார் அவதாரம்

### காப்பு

கணநாதன் விநாயகன் கழலடி மறவாமல்
கணந்தோறும் வழிபடும் அன்பர்க்கு - மண்ணில்
வாழ்வு வளமாகும் வருந்துயர் நீங்கிவிடும்
தாழ்வுறாமல் காப்பான் துணி.

ஐங்கரன் இளவல் ஐயப்பன் புகழ்பாட
எங்கள் பறாளையின் நாயகனை - விநாயகனை
மங்களமாய்த் துதித்து மனதார வாழ்த்தியவன்
பங்கயத் தாழினைப் பணிவாம் மலர்ந்து.

### பொது

| | | | |
|---|---|---|---|
| சிவனை | வழிபடும் | சைவ | மக்களும் |
| சக்தியை | வழிபடும் | சாக்த | மக்களும் |
| கணபதியை | வழிபடும் | காணா | பத்தியரும் |
| முருகனை | வழிபடும் | கௌமா | ரத்தவரும் |
| சூரியனை | வழிபடும் | சௌர | மக்களும் |
| இந்து | மக்களாய் | உலகில் | வாழ்கின்றார். |

| | | | |
|---|---|---|---|
| திருமுறைகள் | போற்றிநிதம் | ஓதுவோர்கள் | மற்றும் |
| அருமறைகள் | ஓதிடும் | அந்தணர்கள் | போற்றும் |
| மண்ணுலகத் | தெய்வங்கள் | மக்களின் | வாழ்வினிலே |
| எண்ணியதை | எண்ணியவாறு | தந்திடுவர் | வரங்கள். |

**ஐயனார் பிறப்பு**

| | | | |
|---|---|---|---|
| முழுமுதற் | கடவுளாம் | முக்கண்ணன் | உடலினிலே |
| உமையவள் | இடப்பாகத்தில் | வடிவமாகி | பாதியானாள் |
| பிடியதன் | உருவாக | உமையவள் | வடிவமாக |
| அடியார்க் | கருள்பாலிக்க | சிவன்கண | பதியைத்தந்தார் |
| அமரர்கள் | இடர்போக்க | நெற்றிக்கண் | ணில்தோன்றி |
| சரவணப் | பொய்கையில் | அறுமுகனை | உமைதந்தாள் |

அமரர்கள் அமிர்தமுண்டு நீண்டகா லம்வாழ
மோகினியு ருவான திருமால் சிவன்சேர்ந்து
காத்தற் தெய்வமாக ஐயனார் அவதரித்தார்
கருங்கடல் மேனியும் செவ்வானச் சடையும்
வெண்ணிறப் பூணூல் தரித்த மேனியும்
ஒருகையில் செண்டும் மறுகையில் வளைதடியும்
அழகிய நீலப் பட்டாடை அணிந்து
பூரணை புட்கலை வலமிடமாக அமர்ந்திட
ஆனை வாகனத்தில் ஐயனார் வந்தார்
தர்மங் குன்றி அதர்மம் ஓங்க
தலைவி ரித்தாடும் பொழுது ஆங்கே
தர்மங் காத்து கெட்டவ ரையொழிக்க
அவதாரம் ஒன்றை இறைவன் கொள்வான்

சிவனும் திருமாலும் ஒன்றுசேர்ந் ததனால்
ஹரிஹர புத்திரன் எங்கள் ஐயப்பன்
பாரினில் தோன்றி காத்தற் தெய்வமாய்
பல்லோரு மேத்த அருள்வான் உவந்து
நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்திட
அசுரரும் தேவரும் அமிர்தம் பெற்றிட
திருப்பாற் கடலை முன்னின்று கடைந்தனர்
மந்தர மலையை மத்தாக நிறுத்தி
வாசுகி பாம்பினை நாணாகக் கொண்டு
தேவர்கள் ஒருபுறம் அசுரர்கள் மறுபுறம்
கடைந்த வேளையில் அமிர்தம் வந்தது.
வேதனை மிகுதியால் வாசுகிப் பாம்பு
ஆலகால விடத்தை அங்கே கக்கியது
கக்கிய விடத்தை சிவனும் உண்டு
நஞ்சுண்ட கண்டராய் தேவரைக் காத்தார்
மீண்டும் அமிர்தத்தை பெற்றிட அவர்கள்
கடைந்த போதில் மத்தும் புதைந்தது
விநாயகரின் செயலே இதுவென அறிந்து
அமிர்தம் பெற்றிட அவரைத் துதித்தனர்
துதித்தபின் மத்தும் மேலே வந்திட

அமிர்தம் அங்கே மீண்டும் தோன்றியது
தோன்றிய அமிர்தத்தை பகிர்ந்து உண்டிட
அமரரும் அசுரரும் போட்டி போட்டனர்
தம்முள் இருவரும் வாதிட்டு நின்றனர்
தேவர்கள் மட்டுமே அமிர்தம் உண்ணவும்
அசுரரை உண்ண விடாமல் தடுக்கவும்
திருமால் அங்கே மோகினியாய் வந்தார்
மோகினியின் அழகில் மயங்கிய அசுரர்கள்
அவளை மணந்திட முன்னின் றார்கள்.
அசுரரில் வீரன் ஒருவனை மணந்திட
மோகினி விருப்பம் கொண்டத னாலே
தம்முள் பகையுற்று ஒருவரோ டொருவர்
மோதியே யாவரும் மாண்டு போயினர்
திரண்ட அமிர்தத்தை திருமால் பங்கிட்டார்
அமரர்கள் மத்தியில் அமரர்கள் போன்று
கள்ளத் தனமாக இராகுவும் கேதுவும்
அமிர்தம் உண்பதைக் கண்ட திருமால்
தனது அகப்பையால் கழுத்தில் அடித்திட
இருவரும் கரும்பாம்பு செம்பாம்பு ஆகினரே.

மோகினி வடிவில் நின்ற திருமாலை
அழகிய சுந்தர வேடங் கொண்டு
வந்த சிவனும் அணைத்த போதினில்
ஹரிஹரன் சுதனாய் ஐயனார் அவதரித்தார்
கருங்கடல் மேனியும் செவ்வானச் சடையும்
செண்டாயு தந்தாங்கிய திருக்கர முங்கொண்டு
அவதார ரஞ்செய்த ஐயனார் தமக்கு
ஹரிஹர புத்திர ரெனநாமஞ் சூட்டினார்.

சண்பக வனத்தில் இருந்த இந்திரன்
தேவர்களின் நன்மைக்காய் தவத்தினை செய்தான்
திருக்கை லாயம் செல்வதற் காக
ஐயனாரை நினைந்து பூசனை செய்தார்
திருக்கை லாயம் சென்று வரும்வரை

இந்திராணி தனையே பாதுகாத்து தந்திட
ஐயனாரை வணங்கி வேண்டுகோள் விடுத்தார்.
இந்திராணி காவலுக்கு ஐயனார் தனது
சேனைத் தளபதியாம் வீரமா காளரை
அனுப்பிக் காத்திட முடிவும் செய்தார்
இந்திராணி யைக்கண்ட அசமுகியும் தோழியும்
இந்திராணியை சூரனிடம் கொடுக்க நினைத்தனர்
கைலயங் கிரிக்குச் சென்ற கணவன்
சென்ற விடயம் சித்திபெற் றிடவே
சீர்காழித் தலத்தில் பூஞ்சோலை ஒன்றில்
இந்திரா ணியுந்தவஞ் செய்து இருந்தாள்.

இந்திரா ணிதனைக் கொண்டு செல்ல
அசமுகி இழுத்து முயற்சி செய்திட
ஓலமோல மென்று இந்திராணி புலம்பினாள்.

“ஹரிஹர புத்திரா ஓலம் ஓலம்”
“வீரம் பொருந்திய தேவே ஓலம்”
“வெள்ளை யானையில் வருவோய் ஓலம்”
“பூரணை புட்கலை கணவா ஓலம்”
“மெய்யருக்கு மெய்யராய் விளங்குவோய் ஓலம்”
“ஆபத்தில் என்னைக் காப்பாய் ஓலம்”
என்று பெரிதாய் ஓலமிட்ட போது
வீரமா காளரும் அவ்விடம் வந்தார்
அசமுகியின் எண்ணத்தை அறிந்த மாகாளர்
அரக்கியின் ஒற்றைக் கையை வெட்டினார்
நாரதர் மூலம் செய்தியை அறிந்து
பூலோகம் வந்த இந்திரன் சென்று
ஐயனாரை வணங்கி நன்றி தெரிவித்து
இருகரங் கூப்பி வணக்கஞ் செலுத்தி
அமரா வதியை சென்ற டைந்தார்

சுபம்

## 5. சுழிபுரம் மேற்கு ஹரிஹர புத்திர ஐயனார்

கடலலைகள் தாலாட்டும் சுழிபுரத்தின் மேற்பால்
மீனினங்கள் வாலாட்டி துள்ளி விளையாடும்
படகினிலே தொழில்செய்வோர் வலைகள்வீசி
தேனிலவில் நாளாந்தம் பொழுதைக் கழிப்பார். (1)

கடற்றொழில்கைத் தொழிலினிலே வாழ்வு மலரும்
மருதநில வயற்பரப்பில் செந்நெல் விளையும்
உடல் வலிமை கொண்டமக்கள் உழைப்பில் வளம்பெருகும்
ஊர்உலகம் வியந்திடுமே மக்கள் உயர்வுகண்டு (2)

கால்நடைகள் களிப்புடனே புற்றரையில் மேயும்
காலாறக் களைப்பின்றி குளம்நாடிச் செல்லும்
பால் தயிர் நெய் வீட்டினிலே தாராளம் கிடைக்கும்
பாங்கான வாழ்க்கையிலே மக்கள்மனம் மலரும். (3)

கடற்செல்வம் குறையாமல் கட்டுமரம் ஏறி
கயல்மீன்கள் விதவிதமாய் பிடித்துவருவார்கள்
வெடியரசன் பரம்பரையில் சித்தர்சுப்பர் ஒருநாள்
அடிவானில் கண்டனரே அற்புதமாய் அதிசயம். (4)

அடிவானில் கடலருகே கப்பல் ஒன்று தோன்ற
அங்கு மனித வாடைவீச போற்றி நின்றார்கள்
கடிகமழ் வெண்வீரமா காளன் என்ற
கவின்மொழிக்கு ஐயனாரும் எழுந் தருளினாரே. (5)

வெடியரசன் பரம்பரையாம் சித்தர் சுப்பர்
பரம்பரையைக் காத்து நிற்கும் ஐயனார் தமக்கு
சிவன் விஷ்ணு சொருபமான அரசாலின் கீழே
அமர்ந்திருக்கச் செய்து வழிபட்டனரே. (6)

அதிகாலை எழுந்து குளிர்நீ ராடி
உடல் உடை உள்ளம் தூய்மையாகி
விபூதி தரித்து காவி அணிந்து
உருத்திரா ட்சம்துணி மாலைகள் பூண்பர் (7)

மலர்கள் கொண்டு அர்ச்சனை செய்து
தீபங்கள் தூபங்கள் நைவேத்ய முடனே
அந்தணரும் ஆலயத்தின் புனிதம் காத்து
நித்திய பூசைகளை ஐயனுக்குச் செய்வர். (8)

ஆலயத்தின் ஆன்மீக நெறியைப் பேணிட
அன்பர்கள் உவகையுடன் பணிகள் செய்தார்
மலரெடுத்து மாலைசூட்ட நந்தவனம் அமைத்து
அறம் வளர்க்கும் அறநெறி சாலைகள் அமைத்தார். (9)

ஆகம நெறிப்படியே கோவில் அமைத்து
கருவறையில் ஐயனாரை அமர்த்திக் கொண்டனர்
ஆலயத்தின் உள்வீதி வெளிவீதி அமைத்து
ஆண்டுக்கோர் முறையாக மகோற்சவம் செய்தனர். (10)

ஆண்டாண்டு ஆவணிபுனர் பூசநட்சத் திரத்தில்
ஐயனாருக்கு கொடியேற்றும் விழாவும் தொடங்கும்
ஆவணியில் அனுசத்தில் தீர்த்தோற்சவம் நடக்கும்
பதினோராம் நாள்திருக் கல்யாணம் நடக்கும் (11)

ஐயப்பன் பவனிகண்டு அடியார் களித்திட
பூரணை புட்கலையுடன் காட்சி கொடுப்பான்
பதினெட்டு படிமீதே அமர்ந்து ஐயன்
அடியார்கள் போற்றிநிற்க அருளும் கொடுப்பான். (12)

மகோற்சவ காலத்தில் மக்களும் கூடி
விரதம் இருந்து ஆசாரம் காத்து
அபிடேகம் பூசைகளை அனுதினம் பார்த்து
வழிபாடு செய்தே அர்ச்சனை செய்வர். (13)

வசந்த மண்டப பூசைகளை கண்டு
ஐயனார் பவனியிலே ஆனந்தம் கொள்வர்
சிறப்பாக நடைபெறும் கப்பல் வேட்டை
சப்பற விழாக்களில் களிந்து நிற்பர். (14)

## தேர்ப்பவனி

அடியார்கள் மனதில் இருளை அகற்றியே
அருள்வெள்ளக் கடலினிலே அடியரைத் தள்ளி
ஊர்வீதி களினூடே ஹரிஹர புத்திரனும்
தேவியர் உடனங்கு தேரில் வருவார். (15)

தேரோடும் வீதியெங்கும் பந்தற்கால் நாட்டி
மகரதோ ரணங்களை அழகுறக் கட்டி
வரவேற்புக் கும்பங்கள் மாலைகள் சாத்தி
ஐயப்பனை வரவேற்க ஆடிப் பாடுவர் (16)

| | | | | |
|---|---|---|---|---|
| மங்கலப் | பேரிகைகள் | முழக்கம் | இடவே | |
| கடலைபழம் | தாம்பூலம் | பிரசாதம் | படைத்து | |
| எங்குமே | ஐயன்நாமம் | பரந்து | ஒலிக்க | |
| கரம்கூப்பி | வடம்பிடித்து | வலமும் | வருவார். | (17) |

| | | | | |
|---|---|---|---|---|
| அன்பெனும் | வலைவீசி | அடியார்கள் | நிற்க | |
| அருள்தனைப் | பொழிந்திடுவான் | எங்கள் | ஐயன் | |
| பொன்னகரம் | போன்று | எங்கும் | காட்சியளிக்க | |
| எங்கள் | வாழ்வை | உயர்த்திடுவான் | இனிதே. | (18) |

| | | | | |
|---|---|---|---|---|
| திங்களைச் | சூடிய | முக்கண்ணன் | மைந்தன் | |
| பார்தனில் | மக்கள் | மகிழ்ந்து | துதிக்க | |
| சித்திரத் | தேரினில் | பவனி | வந்திடும் | |
| காட்சியைக் | காணாத | கண்ணென்ன | கண்ணே. | (19) |

## திருவடி தீர்த்த விசேடம்

இலங்கையின் வடபால் யாழ்ப்பா ணத்தில்
சுழிபுரம் மேற்கு கடற்கரை அருகில்
இராமபிரான் பாதம் பதிந்த மண்ணருகே
திருவடி நிலையெனும் புனிதநீர் நிலையுண்டு (20)

இந்தநீர் நிலையினிலே நூற்றாண்டு காலம்
சமுத்திர தீர்த்தமாடி அருள் பாலிக்கும்
சங்கரன் புத்திரர்கள் கணபதி முருகன்
பறாளையில் அமர்ந்து கொலு வீற்றிருப்பார். (21)

சுழிபுரம் கிழக்கினிலே அம்மை அப்பராம்
சம்புநா தேஸ்வரரும் சம்புநா தேஸ்வரியும்
மாசிச்சிவ ராத்திரியில் தீர்த்த மாட
திருவடிக் கண்மையான சம்பில்துறை செல்வர். (22)

வைகாசி விசாகத்தில் பறாளை முருகனும்
ஆனிமாத உத்தரத்தில் பறாளை விநாயகனும்
ஆவணி அனுசத்தில் ஹரிஹர புத்திரனும்
திருவடி நிலையினிலே தீர்த்த மாடுவர். (23)

ஆவணி ரோகிணி மார்கழி ஏகாதசியில்
பொன்னாலைக் கிருஷ்ணனும் தீர்த்தமாடி
திருவடி நிலைக்கே வந்து சென்றிட
அருள்மழையில் நனைந்தமக்கள் ஆனந்தம் கொள்வர். (24)

## ஐயப்பா சரணம் ஐயப்பா

ஐயப்பன் திருநாமம் வாயில் ஒலித்திட
ஐயப்பன் திருக்கோலம் கண்ணில் நிறைந்திட
ஐயப்பன் ஞானஒளி உள்ளத்தில் மலர்ந்திட
ஐயப்பன் என்றுமே எம்மைக் காப்பான்.

## மங்களம்

அர்த்தநா ரீஸ்வரராம் சிவனுமைக்கு மங்களம்
சித்திபுத்தி சமேதரான கணபதிக்கு மங்களம்
வள்ளிதெய்வ சமேதரான முருகனுக்கு மங்களம்
பூரணைபுட் கலைசமேத ஐயனுக்கு மங்களம்
சுழிபுரம்வாழ் மக்களுக்கும் உலகினுக்கும் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்.

சுபம்

## ஹரிபவ ராஸனம்
## சுவாமியே சரணம் ஐயப்பா

சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா

ஹரிபவ ராஸனம் ஸ்வாமி விஸ்வமோ ஹனம்
ஹரித தீஸ்வரா ஸ்வாமி ராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்யநர்த்தனம்
ஹரிஹாத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

சரண கீர்த்தனம் ஸ்வாமி சக்தமானசம்
பரணலோலுபம் ஸ்வாமி நர்த்தனாலயம்
அருணபாஸுரம் ஸ்வாமி பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

ப்ரணய ஸத்யகா ஸ்வாமி ப்ராணநாயகம்
ப்ரணத கல்பம் ஸ்வாமி வேதவர்ணிதம்
ப்ரணவ மந்திரம் ஸ்வாமி கீர்த்தனப் பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

துரக வாஹனம் ஸ்வாமி ஸுந்தரானனம்
வரகதாயுதம் ஸ்வாமி வேதவர்ணிதம்
குரு க்ருபாகரம் ஸ்வாமி கீர்த்தனப்பிரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

த்ரிபுவனார்ச்சிதம் ஸ்வாமி தேவதாத்மகம்
த்ரிணயனம் பிரபும் ஸ்வாமி திவ்யதேசிகம்
த்ரிச பூஜிதம் ஸ்வாமி சிந்தி தப்பிரதம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

பவபயாபஹம் ஸ்வாமி பாபுகாவுகம்
புவன மோஹனம் ஸ்வாமி பூதிபூஷணம்
த்வள வாரணம் ஸ்வாமி திவ்யவாஹணம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

களமிருதுஸ்மிதம் ஸ்வாமி சுந்தரானனம்
களப கோமளம் ஸ்வாமி காத்ர மோஹனம்
களப கேசரி ஸ்வாமி வாஜி வாஹனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே

ச்ரித ஜனப்பிரியம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
கருதி விபூசணம் ஸ்வாமி ஸாது ஜீவனம்
சுருதி மனோகரம் ஸ்வாமி கீதவாசகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாஸ்ரயே.

# சில குறிப்புகள்

| | | |
|---|---|---|
| சபரிமலை | :- | மகிஷி என்ற அரக்கியை வதைத்தபின்னர், ஐயப்பன் தியானம் செய்த இடம். |
| குருசாமி | :- | பல தடவைகள் சபரிமலைத் தரிசனம் செய்தவர் |
| 18 படிகள் | :- | ஐயப்பனின் ஞானபீடத்தில் ஏறுவதற்காக அமைக் கப்பட்டது. |
| மண்டல பூசை | :- | 41 நாட்கள் தொடர்ந்து இடம்பெறும். |
| மகரஜோதி | :- | தை முதலாம் திகதி, மாலை 6.30 மணிக்கு சபரி மலைக்கு எதிரே காந்தமலையில் தோன்றும் அக்கினி வடிவம். |
| மாலையணிதல் | :- | கார்த்திகை ஒன்றுமுதல் 45-60 நாட்கள்வரை, குரு மூலம் மாலை அணிதல். |
| இருமுடிக்கட்டு | :- | ஐயப்ப தரிசனத்திற்கு செல்லும் பக்தர்கள் ஒரு பகுதியில் பூசை அபிடேக நைவேத்ய பொருட் களையும் மறுபகுதியில் யாத்திரைக்குத் தேவை யான உடுப்புகளையும் வைத்திருத்தல். |
| கன்னிச்சாமி | :- | முதற்தடவையாக சபரிமலை செல்பவர். |
| அட்டாபிசேகம் | :- | விபூதி, சந்தனம், பால், பன்னீர்,சொர்ணம், தேன், பஞ்சாமிர்தம், இளநீர். |
| ஐயப்பன் | :- | மாலைபோட்டு, கறுப்பாடை அணிந்த<br>ஆண்கள் - ஐயப்பன் என்றும்<br>பெண்கள் - மாளிகை புறத்து அம்மன் என்றும்<br>சிறுவர்கள் - மணிகண்டன் எனவும் அழைப்பர். |
| பஜனை | :- | நாள் தோறும் பஜனை செய்தபின்னர், குரு சாமிக்கு பாத பூசை செய்தல். |



ஸ்ரீமாருதி - வழுக்கம்பரை